*Reprint from Kalaimagal.*



# கலைமகள்

THE M. L. J. PRESS, MYLAPORE.

Reprint from Kalai Magal.

51

# பல்லவச் சிற்பங்களில் தேவிக்கு இடும் தலைப் பலி

க. அ. நீலகண்ட சாஸ்திரி

தமிழ்நாட்டில் பல்லவ அரசர்கள் காலத்தில், அதாவது கி. பி. ஏழுமுதல் ஒன்பது முடியவுள்ள நூற்றாண்டுகளில், சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் பௌத்தம் சைனமுதலிய வேத விருத்தமான சமயங்களை வாதில்வென்று ஹிந்துமதத்தை நிலை நிறுத்தினார்களென்பதை யாவரும் அறிவர். அதே காலத்தில் சைவ சமயமானது காபாலிகம், காலாமுகம், பாசுபதம் முதலிய பல கிளைகளாகப் பிரிந்திருந்ததென்பதும், இக்கிளைகளிற் சில, கோரமான கொள்கைகளையும் குரூரமான வழக்கங்களையும் கைப்பற்றி வந்தனவென்பதும் சாஸனங்களாலும் பல்லவ அரசனாகிய மஹேந்திரவர்மன் எழுதிய மத்தவிலாசம் முதலிய நூல்களாலும் அறியக்கிடக்கின்றன. இப்படிப் பலவாறாக ஏற்பட்டிருந்த பிரிவுகளின் நடுவே தேவி உபாஸனையை முக்கியமாகக் கைக்கொள்ளும் சாக்தமும் ஒன்றாயிருந்திருக்கலாம் என்பதை எளிதில் ஊகிக்கலாம். இஃது எப்படி யிருந்தபோதிலும், தேவி உபாஸகர்கள் அக்காலத்தில் மேற்கொண்டுவந்த விரதங்களில் தங்கள் தலையை அறுத்துத் தேவிக்குப் பலியாக இடும் ஒருமுறையுண்டென்றும், இந்த முறையைப் பல்லவர் காலத்துச் சிற்பங்களினின்று நாம் நன்றாய்த் தெளியலாமென்றும் டாக்டர் வோகல் (*J. Ph. Vogel*) என்னும் ஒரு டச்சு (*Dutch*) அறிஞர் ஓர் அரிய கட்டுரை எழுதி லண்டனில் உள்ள பூர்வ தேசியகலாசாலை (*School of Oriental Studies, London Institution*) யினின்று பிரசுரமாகும் பத்திரிகை (*Bulletin*)யில் சில மாதங்களுக்கு முன் வெளியிட்டார். அக்கட்டுரையின் மொழிபெயர்ப்பே பின்வருவது.

சென்னைக்குத் தெற்கே, மாமல்லபுரம் அல்லது மாவலிவரம் என்னும் ஊரின்கணுள்ள அற்புதமான கற்குகைக் (*rock-cut*) கோயில்கள் ஐந்தும் பலகாலும் வருணிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வதிசயம் வாய்ந்த கோயில்களைப் பொதுஜனங்கள் பாண்டவர்களுடன் சம்பந்தப்படுத்துகிறார்கள்; அதனால்தான் இவைகளில் மிகச் சிறிதாயமைந்துள்ள கோயிலுக்குத் திரௌபதியின் இரதம் எனப்

பெயர் வழங்குகிறது. யதார்த்தமாக இக்கோயிலானது துர்க்கா தேவியின் ஒரு மூர்த்திபேதத்திற்காக ஏற்பட்டதேயாகும். மயிடாசுரனது வெட்டுண்ட தலையின்மீது நின்றுகொண்டிருக்கும் துர்க்கைவடிவம் இக்கோயிலின் வெளிச்சுவரில் செதுக்கப்பட்டிருப்பதன்றி, அவள் வாகனமாகிய சிங்கமும் செவ்வனே ஆரம்பிக்கப்பட்டு முடிவுபெறாத நிலையில் சிறிது தூரத்தில் காணப்படுகிறது.

கர்ப்பக்கிருகத்தின் பின் சுவரில் ஒரு சிற்பமிருக்கிறது; அதன் நடுவே ஆழியும் சங்குமேந்திக்கொண்டு நான்கு கைகளுடைய ஒரு தேவி நிற்கிறாள்; அவளது இரண்டாம் வலக்கை அபயமுத்திரையைக் காட்டுகிறது; இரண்டாம் இடக்கை இடுப்பின்மேல் வைக்கப்பெற்றிருக்கிறது (படம்—1). பிரசித்திபெற்ற பிரெஞ்சுச்சிற்ப அறிஞரான ஸ்ரீமான் ஜூவோ-துப்ராயில் என்பவர் அவ்வுருவமானது குரூர தேவதையான சாமுண்டிகா தேவியின் வடிவமென்றும், அவ்வடிவம் கர்ப்பக்கிருகம் முகப்பு என்ற வித்தியாசமின்றி எல்லா இடங்களிலும் செதுக்கப்பட்டிருக்கிறதென்றும், விசேஷமாகக் கீழ்த்திசை முகப்புக்களில் எருமைத் தலையின்மேல் நிற்கும் காளியின் வடிவாகக் காணப்படுகிறதென்றும் கருதுகிறார்.


ஆனால் யார் இந்தத் தேவதை என்று நாம் இப்போது விசாரிக்கப் புகவேண்டாம். இக்கட்டுரையின் விஷயம் திரௌபதி இரதம் என்று வழங்குகிற கோயிலில் உபாசிக்கப்படும் தெய்வத்தைப் பற்றியதன்று; அவளுடைய அனுக்கரில் ஒருவனைப்பற்றியதேயாம். தேவியின் பாதங்களினருகே மண்டிபோட்டுக்கொண்டு இருக்கிற இரண்டு உருவங்கள் இருக்கின்றன; இருவரும் ஆண்மக்களென்பது வெளிப்படை. தேவியின் வலக்கைப்புறமிருக்கும் மனித உருவமானது நம் கவனத்தை ஈர்க்கும்படியான ஒரு விசேஷ நிலையில் அமைக்கப்பட்டிருக்கின்றது. இம் மனிதன் இடதுகையினால் தன் தலைமயிரைப் பிடித்துக்கொண்டு, வலக்கையில் பிடித்திருக்கும் வாளால் அம்மயிரை வெட்டுகிறவன்போல் இருக்கிறான். இதுதான் மிகப் பொருத்தமான கருத்தென்பது நான் 1910-ம் வருஷம் கிரிஸ்மஸ் சமயத்தில் "ஏழு கோயில்" (*Seven Pagodas*) என்று கூறப்படுமிடத்திற்கு (அதாவது மஹாபலிபுரத்திற்கு) போயிருந்தபோது எனக்குத் தோற்றியது. நான் எழுதிய "ஏழு கோயில்களைக் குறித்த சிற்ப விஷயங்கள்" என்னும் கட்டுரையில் இவ்வபிப்பிராயத்தை வெளியிட்டதோடு பற்பல நாட்டினரிடத்துப் பரவியிருப்பதும் யாவருக்கும் நன்றாகத் தெரிந்ததுமான முடியிறக்கும் வழக்கத்தையும் குறிப்பிட்டேன்.





1. மாமல்லபுரம் திரௌபதி இரதத்திலுள்ள துர்க்கையின் உருவம்.



2. மாமல்லபுரம், வராஹமண்டபச் சிற்பம்.



3. திருச்சிஜ்ப்பள்ளிக் கீழ்ச்குகையில் உள்ள சிற்பம்.



4. புள்ளமங்கைச் சிவன் கோயிலிலுள்ள சிற்பம்.

"Copyright : Archaeological Survey of India"

தொன்மையாராய்ச்சி (*Archæological Survey*) இலாகாவைச்சார்ந்த மிஸ்டர் ஏ. எச். லாங்ஹர்ஸ்ட் சமீபத்தில் பல்லவர் சிற்பத்தை (*Pallava Architecture*) விரிவாகவும் நுட்பமாகவும் வர்ணிக்குமிடத்து என் கருத்தை அங்கீகரித்துக்கொண்டார். அவர் கூறுவது பின்வருமாறு: "துர்க்கையின் வலதுபுறம் மண்டிபோட்டுக்கொண்டிருக்கும் ஆராதகன் தன் நீண்ட முடியை வாளால் வெட்டித் தேவிக்குப் பலியிடுவதுபோல் காணப்படுகிறான்; இந்த வழக்கம் இப்போதும் தென் இந்தியாவில் உள்ளது; புருஷர்களாலும் ஸ்திரீகளாலும் அநுஷ்டிக்கப்படுகிறது. இந்த உருவம் மிகவும் கவனிக்கத்தக்கது; வராஹமண்டபமென்று வழங்கும் மண்டபத்திலே இதே தேவியைக் காட்டுகிற மற்றொரு சிற்பத்திலும் கூடக் காணப்படுகிறது."

மிஸ்டர் லாங்ஹர்ஸ்டு குறித்துள்ள வராஹ மண்டபத்துச் சிற்பமானது (இம்மண்டபம் மாமல்லபுரத்துக் குகைக்கோயில்களில் ஒன்று) சதுர்புஜங்களுடைய தேவியை நடுநாயகமாகக் கொண்ட ஓர் உருவக்கூட்டம் (படம்—2). திரௌபதியென்று வழங்கும் தேவியைப்போலவே, இவளும் நான்கு கணங்களைத் தனது பரிவாரங்களாகப் பெற்றிருக்கிறாள். சிற்பத்தின் மேல்மூலைகளிலே ஒரு சிங்கமும் ஒரு மானும் அரைகுறையாகத் தெரிகின்றன. தேவி பின் பாதங்களினருகே மண்டியிட்டிருக்கும் இரண்டு புருஷ உருவங்களையும் கவனிப்போம். அவளுக்கு வலப்புறமிருப்பவன் நமக்கு முதுகு காட்டிக்கொண்டிருக்கிறான்; தன் இடதுகையினால் நீண்ட தலைமயிரினையும் வலது கையால் வாளையும் பிடித்திருக்கிறான். இந்தச் சிற்பத்திலும் இம்மனிதன் தன் தலைமயிரை வெட்டப்போவது போலத் தோன்றினபோதிலும், வாள் வைத்திருக்குமிடமானது முடிக்கு வெகுதூரம் கீழே யிருப்பது கவனிக்கத்தக்கது.

திருச்சினாப்பள்ளியில் கீழ்க் குகையில் இதே பொருளடங்கிய மூன்றாவது சிற்பமொன்று இருக்கிறது (படம்—3). ஆனால் இதைப் பார்க்கும்போது, நாம் முதற்கூறிய கருத்து பொருத்தமாகத் தோன்றவில்லை. சதுர்ப்புஜையான தேவியினடிகளை வணங்கிக் கொண்டிருக்கும் மனிதன், மற்ற இரண்டிடங்களிற் போலவே தன் குடுமியைப் பிடித்திருப்பினும், அவன் தன் வலக்கை வாளை வைத்திருக்குமிடமானது தன் கழுத்திலேயே யொழிய அவன் தலைமயிரிலில்லை யென்பது பிரத்தியக்ஷம். ஆகையால் நியாயமாய் இங்கு ஒரு கேள்விக்கிடமுண்டு: அதாவது இவ்விடத்தில் சிற்பி காட்டப் புகுந்த விஷயமானது முடியைப் பலியாகக் கொடுப்பதன்றித் தலையையே பலியாகக்கொடுப்பதல்லவா? என்பது.

இவ்வரிய விஷயத்திற்கு உதாரணமாகக் கிடைத்திருக்கும் நான்காவது சிற்பத்தையும் பார்த்தால் நமது கேள்விக்கு விடை 'ஆம்' என்றே சொல்லிவிடலாம். இந்தச் சிற்பமானது தஞ்சாவூருக்குத் தெற்கில் பத்து மைல் தூரத்தில் பசுபதி கோயிலின் அருகேயுள்ள புள்ளமங்கை என்னும் கிராமத்துச் சிவன் கோயிலிலுள்ள கர்ப்பக் கிருகத்தின் பின்சுவரை அலங்கரித்து நிற்கிறது. இது நீண்ட கொம்புகள் வாய்ந்த மயிடன் தலைமேல் எட்டுக் கைகளுடன் நின்று கொண்டிருப்பதாய் வெகு அழகாக அமைந்த துர்க்காதேவியின் உருவம். தேவியானவள் விசித்திரமாகச் செதுக்கப்பெற்ற மகர தோரணத்தோடு கூடின ஒரு மாடப்புரையில் அமைக்கப்பட்டிருக்கிறாள். இம்மாடப்புரைக்கு இருபுறமும் கொடுங்கையைத் தாங்கி நிற்கும் வெளித்தூண்கள்வரையு முள்ள இடத்தில் காட்டப்பட்டிருக்கும் உருவங்கள் இப்பயங்கர தேவியின் பரிவாரங்களையே குறிப்பதாகக் கொள்ளவேண்டும். முதலாவது, மாமல்லபுரத்து வராகமண்டபத்துச் சிற்பத்தில் மேல்மூலைகளில் அமைக்கப்பட்ட சிங்கம் மான் ஆகிய இவ்விரண்டு மிருகங்களும் இங்கேயும் இருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். இங்கு உள்ள மானின் கொம்புகள் கிளைத்திருக்கின்றன; அதன் முன்பாக ஒரு கணத்தானும் உண்டு. இவ்விரண்டு மிருகங்களுக்கும் கீழே ஒவ்வொரு புருஷன் மண்டிபோட்டுக்கொண்டு இருக்கிறான். துர்க்கையின் வலதுபுறமிருப்பவனே, நாம் இதுகாறும் விசேஷமாகக் கவனித்துவந்த உருவங்கள் மற்றச் சிற்பங்களில் என்ன நிலையில் காணப்பட்டனவோ அதே நிலையில் காணப்படுகிறான்; ஆனால் இந்தச் சிற்பத்தில் அவன் தன் தலையை அறுத்துத் தேவிக்கு பலியாக இடத் துணிந்திருக்கிறானென்பது ஐயமறத் தெளியக்கூடியதாக இருக்கிறது. அதே மாதிரி, தேவியின் இடதுபுறம் மண்டியிட்டிருப்பவன் தன் தொடையினின்றும் சதையை வெட்டுகிறவன்போல் புலப்படுகிறான்.

புள்ளமங்கைச் சிவாலயத்தில் அக்கோயிலுக் குரியனவாயும் பரகேஸரிவர்மன் முதலிய சோழ அரசர்கள் காலத்தனவாயும் உள்ள பல தான சாஸனங்கள் இருக்கின்றன. அக் கோயிலின் அலங்காரச் சிற்பங்கள் பல்லவர் காலத்துச் சிற்பங்களைப்போல் சுத்தத் தன்மையும் ஆற்றலும் வாய்ந்திராவிடினும், பிற்காலத்துத் தமிழ்ச் சிற்பங்களிற்போல் மிதமிஞ்சி வளர்த்தப்படாது வளப்பமும் வனப்பும் பெற்று மிகச் சிறந்து விளங்குகின்றன. பிரகிருத விஷயமான சிற்பக்குழாமானது, பல்லவர்காலத்துக் கட்டடங்களில் கண்ட சிற்பங்கள் காலக் கிரமத்திலடைந்த பரிணாமமென்பது திண்ணம். ஆகையால், நாம் எடுத்துக்காட்டிய ஒவ்வொரு சிற்பத்திலும் தேவியின்

வலது பக்கம் மண்டிபோட்டுக்கொண்டிருக்கும் மனிதன் தன் தலையைப் பலியாகக் கொடுக்கத் துணிந்தவனென்றே தீர்மானிப்பது தவறாகாது. ஒரு சமயம் இந்நிலையில் காட்டப்பெற்ற தேவியின் பக்தன் அக்கோயிலை ஸ்தாபித்தவருள் ஒருவனாயிருக்கலாம். தெய்வத்தினிடத்துத் தனக்கிருந்த மிகுந்த பக்தியையும், அத்தெய்வத்திற்குத் தன் தலையை வேண்டுமானாலும் கொடுக்கத் தான் சித்தமாயிருப்பதையும் இவ்வாறு குறித்திருக்கலாம்.*

யாராவது இச்சிற்பங்களிற் காட்டியபடி தானே தன் தலையை அறுத்துக்கொள்ளுவது சாத்தியமா என்று விசாரிக்கும் நோக்கம் நமக்கில்லை. இஃது எப்படி யிருப்பினும், இக்காரியத்தில் தலைப்படுவான் ஒருவனுக்கு அளவிறந்த மனத்துணிவும் அசாதாரணமான கைச் சாமர்த்தியமும் அவசியம். இந்தியாவில் முற்காலத்தில் இம்மாதிரியான ஆத்மத் தியாகம் சம்பவிக்கக் கூடியதாகக் கருதப்பட்டு வந்ததுமாத்திரம் நிச்சயம். வடமொழியிலுள்ள இலக்கிய நூல்களில் இதே விஷயத்தைக் காணலாம். சோம தேவருடைய 'கதா ஸரித்ஸாகர' த்தினின்று சில உதாரணங்களைத் தருகிறேன்.

முதலாவது, வீரவரனைக் கதா நாயகனாகக்கொண்ட பிரசித்தமான கதை ஒன்று இப் பெருங்கதைக் கடலில் இரண்டு விதமாக அமைந்திருக்கிறது. அதில் இரண்டாவதாயமைந்தது வேதாளம் கூறும் கதைகளில் நான்காவது. ஆகையால் இக்கதையானது யாவராலும் விரும்பப்பட்ட 'வேதாள பஞ்சவிம்சதி' என்னும் கதைக் கொத்தைச் சேர்ந்ததாகும். மேலும் இவ்வுருக்கமுடைய கதையானது ஹிதோபதேசத்திலும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

கதா ஸரித்ஸாகரத்திலிருக்கிறபடி இக் கதையைப் பின்வருமாறு சுருக்கிச் சொல்லலாம். இங்கு ஒரு பிராமணனாகக் குறிக்கப்பட்ட கதா நாயகன் வீரவரன் என்பான் தன் எஜமானனை சூத்ரகனென்னும் அரசனுடைய வாழ்நாளை நீடிக்கும்பொருட்டாக, தன் மகன் சத்வவரனுடைய தலையைச் சாமுண்டி தேவிக்குப் பலியிடுகிறான். அதனாலுண்டான சோகத்தினால் அவன் மகள் இறந்துபட, அவனுடைய மனைவி தன் இரு குழந்தைகளும் ஏற்றப்பட்டிருக்கும் ஈமத்தின் மீதே தானும் ஏறி உயிர் நீக்கத் தீர்மானிக்கிறாள். பிற்பாடு வீரவரன் தன்னையும் பலியாகக் கொடுத்து அம்பிகையின் பிரஸாதத்தைப் பெற விரும்புகிறான். காளி மஹிஷாசுரமர்த்தனியின் மீது ஒரு ஸ்தோத்திரஞ் சொல்லிவிட்டு, தன்

---

* இந்த அபிப்பிராயம் அவ்வளவு பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை.—நீ.

வாளால் ஒரே வெட்டாகத் தன் தலையை வெட்டிவிடுகிறான். அரசனான சூத்ரகனும், இவனுடைய பெரும் பக்திக்கு ஈடுபட்டு, தன் அருமைச் சேவகனைத் தானும் பின்பற்ற எத்தனிக்கிறான். அப்போது ஆகாயத்தினின்று ஒரு குரல் அவனைத் தடுக்கிறது. கடைசியாய் யாவரும் உயிர் மீண்டனர்.

கதா ஸரித்ஸாகரத்தில் மற்றோரிடத்திலும் இக்கதையே சில வேறுபாடுகளுடன் காணப்படுகிறது. இவ்விடத்தும் கதா நாயகன் வீரவரனென்னும் ஓர் அந்தணனே. ஆனால் அவன் எஜமானன் விக்ரமபுரத்தில் வசித்த விக்ரமதுங்கனென்னும் ஓர் அரசன். வீரவரன் சண்டிகாதேவியைத் துதித்துத் தன் தலையை யறுக்கத் தயாரானபோது அசரீரியானது அவனை ஆத்திரமாக ஒன்றுஞ் செய்யலாகாதென்று தடுத்து ஒரு வரம் தருவதாகச் சொல்லிற்று. அப்போது வீரவரன் விக்ரமதுங்கன் உயிரையும் தன் பெண்டு பிள்ளைகளின் உயிர்களையும் தரும்படி வேண்டினான்.

ஹிதோபதேசக் கதையானது வேதாளக் கதையை ஒத்திருக்கிறது. வசன நடையில் அமைந்திருக்கும் இக்கதையில் வீரவரன் ஒரு ராஜபுத்ரனாகக் கூறப்பட்டிருப்பது சகஜமே; ஆயினும் இஃது ஒரு புதிய கற்பனை. அரசன் பெயர் சூத்ரகன்தான். அரசனுக்கு வரப்போகிற கதியை அழுதுகொண்டு கதா நாயகனுக்கு அறிவுறுத்தும் பெண்ணானவள் பூதேவியல்ல; சூத்ரக அரசனின் இராச்சிய இலக்குமியே.* வீரவரனென்னும் ராஜபுத்ரன், தன் மகன் தலையை இங்குப் பகவதி ஸர்வமங்களையென்று அழைக்கப்பட்ட தேவிக்குப் பலியாகக் கொடுத்த பிறகு, தன் தலையையும் வெட்டிவிடுகிறான். அவன் மனைவியும் அப்படியே செய்கிறாள். இச்செய்திகளைப் பார்த்துக்கொண்டிருந்த அரசன், தன் தலையையும் அறுத்துவைக்க வாளைக் கையில் எடுக்கவே, தேவி பிரத்யக்ஷமாக வந்து அவனைத் தடுக்கிறாள். யாவரும் திரும்ப உயிர் பெறுகிறார்கள்.

கதா ஸரித்ஸாகரத்தில் வேதாளம் சொல்லுகிற ஆறாவது கதையிலும் தேவிக்கு இடும் தலைப் பலிக்கு ஒரு விந்தையான உதாரணம் உண்டு. இந்தக் கதைக்கு நாயகன் தவளன் என்ற ஒரு வண்ணான். அவன் மணம் புரிந்துகொண்டு சோபவதி என்னும் ஊரிலுள்ள மிகப் பிரஸித்திபெற்ற ஒரு கௌரி கோயிலினுட் சென்று தேவியைத் திருப்தி செய்விக்க வேண்டுமென்ற எண்ணத்தை மேலிட்டுக்கொண்டு, தன் தலையைக் கோயில்மணியின் சங்கிலியில்

---

* இவ்விடத்தில் பூதேவியே அரசனின் லக்ஷ்மியாகக் கூறப்பட்டிருக்கிறாள் என்பது தெளிவு—நீ.

கட்டிவிட்டுப் பிறகு அதைத் துண்டித்தான்; தலையை முதலில் சங்கிலியிற் கட்டியது அதை அறுப்பது கொஞ்சம் இலகுவாயிருத்தலின் பொருட்டே. அவன் மனைவியுடன் வெளியிற் காத்திருந்த மைத்துனன் கடைசியில் கோயிலினுட் சென்று நடந்த செய்தியையறிந்து தானும் அவ்வளவு உத்தமமான தியாகமுறையைப் பின்பற்றினான். கல்யாணப் பெண்ணானவள் தன் மணவாளனும் சகோதரனும் தற்கொலை செய்துகொண்ட விபரமறிந்ததும், தானும் மனமுடைந்து ஓர் அசோக மரத்தில் தூக்குப் போட்டுக்கொள்ளத் தொடங்குகிறாள். தானே ஏற்படுத்திக்கொண்ட இம் மரண வழியினின்றும் ஓர் அசரீரியாற் றடுக்கப்பட்டு அதனிடத்து ஒரு வரமுமடைந்தாள். அவள் கேட்ட வரமானது தன் கணவனும் சகோதரனும் உயிர் பெற்று எழவேண்டுமென்பதென்று சொல்ல வேண்டா; ஆனால் அவ்விரு தலைகளையும் அவ்விருவருடைய உடல்களோடு பொருத்தவேண்டியதா யிருந்தது; பதட்டத்தால் தலைகளை மாற்றி வைத்துவிட்டாள். அவ்விரு புருஷர்களில் யார் அவள் கணவனுவா னென்னும் வினாவுடன் கதை முடிவு பெறுகிறது.

இதுகாறும் காட்டப்பட்ட உதாரணங்களால் தங்கள் தலையைத் தாங்களே பலிகொடுக்கும் முறை ஸஹஜமாயிருந்ததென்று ஏற்படுகிறது. இந்த உத்கிருஷ்டமான பலி எப்போதும் ஒரு தேவிக்கே கொடுக்கப்படுகிறது. இது பிரகிருதத்தில் கவனிக்கத் தகுந்த விஷயம். ஏனென்றால் நாம் மேல் எடுத்துக்காட்டிய சிற்பங்களிலும் இதையே காண்கிறோம். தங்கள் தலையைப் பலியாகக் கொடுக்கும் முறையானது இந்தியாவில் யதார்த்தமாகக் கையாளப்பட்டு வந்ததென்பது மிஸ்டர் ஹீராலால் எழுதிய ஒரு விசித்திரமான கட்டுரையாலும் வெளிப்படுகிறது. ஹிந்துக்களில் சில கிளையினர், அதற்காகப் பிரத்தியேகமாக ஏற்பட்ட மண்டபங்களில் தங்கள் தலைகளையும் நாக்குக்களையும் வெட்டியிடுவது வழக்கமென்பதும், அவர்கள் இவ்விஷயத்திற் காட்டிய ஆற்றலானது இதைக் காட்டிலும் மேன்மையான காரியத்தில் செலுத்தப்படவேண்டுந் தகுதிவாய்ந்த தென்பதும் அன்னவர் கூற்று.